# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## புலமைச் சொத்து (திருத்தம்)

***2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்து சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*வர்த்தக அமைச்சர் அவர்களால் 2022, பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***108 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 42.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

இச்சட்டமூலமானது, புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் மற்றும் அவை தொடர்பான கருமங்களைப் பதிவுசெய்வதற்காகவும் நிருவகிப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கு "புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் பதிவு முறைமை" ஒன்றை அறிமுகப்படுத்துவதற்காக 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமை சொத்துச் சட்டத்தைத் திருத்துகின்றது.

ச.வ.- ஒ. 8/2020

## 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்து சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

***1***. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, புலமைச் சொத்து (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***2***. (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச்சொத்து சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''கைத்தொழில் வடிவமைப்புகள், ஆக்கவுரிமைகள், குறிகள் மற்றும் சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான வேறேதேனும் கருமம் என்பவற்றினதும் பதிவினதும் நிருவாகத்தினதும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கைத்தொழில் வடிவமைப்புகள், ஆக்கவுரிமைகள், குறிகள், புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் மற்றும் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான வேறேதேனும் கருமம் என்பவற்றினதும் பதிவினதும் நிருவாகத்தினதும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***3***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''கைத்தொழில் வடிவமைப்புகள், ஆக்கவுரிமைகள், குறிகள், அத்துடன் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறான வேறேதேனும் கருமம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கைத்தொழில் வடிவமைப்புகள், ஆக்கவுரிமைகள், குறிகள், புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் மற்றும்

சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்படுகின்றவாறான வேறேதேனும் கருமம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "கைத்தொழில் வடிவமைப்புகள், ஆக்கவுரிமைகள், குறிகள், அத்துடன் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறான வேறேதேனும் கருமம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கைத்தொழில் வடிவமைப்புகள், ஆக்கவுரிமைகள், குறிகள், புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் மற்றும் சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்படுகின்றவாறான வேறேதேனும் கருமம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவு, "புவியியற்சார் சுட்டிக்காட்டுகை'' என்னும் சொற்றொடரின் வரைவிலக்கணத்தை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "புத்தாக்கங்களையும், கைத்தொழில் வடிவமைப்புகளையும், குறிகளையும் வர்த்தகப் பெயர்களையும், இலக்கிய விஞ்ஞான மற்றும் கலைப்படைப்புக்களையும் வேறு புலமைச்சொத்தையும் பாதுகாக்கும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "புத்தாக்கங்களையும், கைத்தொழில் வடிவமைப்புகளையும், குறிகளையும், வர்த்தகப் பெயர்களையும், புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளையும், இலக்கிய, விஞ்ஞான மற்றும் கலைப்படைப்புக்களையும் வேறு புலமைச்சொத்தையும் பாதுகாக்கும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(iv) உற்பத்திப் பொருட்கள் அல்லது பண்டங்கள் அல்லது சேவைகளின் உற்பத்திச் செயன்முறை உட்பட எவையேனும் பண்டங்களின் புவியியற்சார் சுட்டிக்காட்டுகை;".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 160அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IX இல், "புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள்" என்னும் தலைப்பை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 160அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

*"வரைவிலக்கணங்கள்*

160அ. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப்படுத்தினாலொழிய -

"அதிகாரமளிக்கப்பட்ட பயன்படுத்துநர்" என்பது, இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றின் பயன்படுத்துநர் ஒருவர் எனப் பொருள்படும்;

"கட்டுப்பாட்டுத் திட்டம்" என்பது, உற்பத்திப் பொருள் அளவுக்குறிப்பீட்டுடனான இணங்கியொழுகுகை பற்றிய சரிபார்த்தல் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது பற்றிய முறை எனப்பொருள்படும்;

"புவியியற்சார் சுட்டிக்காட்டுகை" என்பது, எவையேனும் பண்டங்களின் கொடுக்கப்பட்ட தரம், நன்மதிப்பு அல்லது வேறு பண்பு அதன் புவியியற்சார் தோற்றுவாய்க்கு அத்தியாவசியமாக ஏற்றிக்கூறப்படற்பாலதாகவிருக்கின்றவிடத்து ஒரு நாட்டின் ஆள்புலத்தில் அல்லது அந்த ஆள்புலத்தில் உள்ள பிராந்தியமொன்றில் அல்லது இடப்பிரதேசத்தில் உருவாகின்றதாக அப்பண்டங்களை அடையாளங்காண்கின்ற ஒரு சுட்டிக்காட்டுகை எனப் பொருள்படும்;

*"பண்டங்கள்" என்பது, எவையேனும் உற்பத்திசெய்யப்பட்ட அல்லது இயற்கையாக கிடைக்கக்கூடியதாகவுள்ள கமத்தொழில்சார் உற்பத்திப் பொருட்கள், உணவு, வைன், மதுசாரம் அல்லது ஏதேனும் கைவினை அல்லது கைத்தொழிற் பொருள் எனப்பொருள்படும்;*

*"உற்பத்தியாளர்" என்பது, பண்டங்கள் தொடர்பில்-*

*(அ) அத்தகைய பண்டங்கள் கமத்தொழில்சார் உற்பத்திப்பொருட்கள், வைன் அல்லது மதுசாரமாகவிருப்பின், அத்தகைய பண்டங்களை உற்பத்திசெய்கின்ற அல்லது அத்தகைய பண்டங்களை பதனிடுகின்ற அல்லது பொதியிடுகின்ற;*

*(ஆ) அத்தகைய பண்டங்கள் இயற்கைப் பண்டங்களாகவிருப்பின், அத்தகைய பண்டங்களை பயன்படுத்துகின்ற; அல்லது*

*(இ) அத்தகைய பண்டங்கள் கைவினைப் பொருட்கள் அல்லது கைத்தொழில்சார் பொருட்களாகவிருப்பின், அத்தகைய பண்டங்களை ஆக்குகின்ற அல்லது உற்பத்திசெய்கின்ற;*

*எவரேனும் ஆள் எனப்பொருள்படும்; அத்துடன்*

*"அளவுக்குறிப்பீடு" என்பது, பண்டங்கள் அல்லது உற்பத்திப் பொருட்களின் பண்புகள், உற்பத்திசெய்யும்முறை, புவியியற்சார் இடப்பரப்பு மற்றும் பண்டங்கள் அல்லது உற்பத்திப்பொருளின் பண்புகள், தரம் அல்லது நன்மதிப்புக்கும் அதன் புவியியற்சார் தோற்றுவாய்க்கும் இடையிலான தொடர்பு பற்றிய*

தொழில்நுட்ப விபரங்களை வழங்குகின்ற, புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஒரு ஆவணம் எனப்பொருள்படும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவு, அதன் (4அ) மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 161அ, 161ஆ, 161இ, 161ஈ மற்றும் 161உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்*

**8**. பின்வரும் புதிய பிரிவுகள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 161அ, 161ஆ, 161இ, 161ஈ, மற்றும் 161உ, என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"புவியியற்சார் சுட்டிக் காட்டுகைகளின் பதிவுக்கான ஏல்தகவுடைமை*

161அ. (அ) 160அ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் வரைவிலக்கணத்துடன் இணங்கியொழுகாத;

(ஆ) எந்த புவியியற்சார் சுட்டிக் காட்டுகையின் பயன்பாடு சட்டம், ஒழுக்கம், சமயம், ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்காறுகள் அல்லது பொது ஒழுங்குக்கு முரணாகவுள்ளதோ அந்த;

(இ) தோற்றுவாய் நாட்டில் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றாக பாதுகாக்கப்படாத அல்லது பாதுகாக்கப்படாதொழிந்த அல்லது அத்தகைய நாட்டில் பயன்படுத்தாதொழிந்துள்ள;

(ஈ) இயைபான பண்டத்தின் பொதுப்பெயராக சாதாரண மொழியில் வழக்கமுறையான பதத்தை ஒத்திருக்கின்ற;

(உ) அப்பண்டத்தின் பண்புகள், தன்மை, தரம், தோன்றிய இடம் மற்றும் உற்பத்திச்செயன்முறை அல்லது அதன் பயன்பாடு என்ற வகையில் பொதுமக்களை பிழைவழியுய்க்கின்ற அல்லது ஏமாற்றுகின்ற; அல்லது

(ஊ) தாவர வகையொன்றின் அல்லது விலங்கினமொன்றின் பெயரை அமைத்துருவாக்குகின்ற,

ஏதேனும் புவியியற்சார் சுட்டிக் காட்டுகை இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுதலாகாது.

புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

161ஆ. (1) (இதனகத்துப்பின்னர் “விண்ணப்ப தாரர்” எனக்குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் இயைபின பண்டத்தின் உற்பத்தியாளர்களின் அக்கறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அப்போதைக்கான ஏதேனும் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் ஆட்கள் அல்லது உற்பத்தியாளர்கள் கழகம் அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்பு அல்லது அதிகாரசபை, விதித்துரைக் கப்படவேண்டிய அத்தகைய முறையிலும் படிவத்திலும் அத்தகைய ஆவணங்கள் மற்றும் செய்முறைப்படுத்தற் கட்டணத்துடன் சேர்த்தும் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றாக அத்தகைய பண்டங்களை பதிவுசெய்வதற்காக பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்ப மொன்றைச் செய்யலாம்.

(2) விண்ணப்பமொன்றைப் பெறுவதன் மேல், பணிப்பாளர் தலைமையதிபதி விதித்துரைக்கப்பட வேண்டிய முறையில் அத்தகைய விண்ணப்பத்தைப் பரிசோதித்தல் வேண்டும்.

(3) பதிவுசெய்வதற்கு உட்கருதப்பட்ட புவியியற் சார் சுட்டிக்காட்டுகை 161அ என்னும் பிரிவின் நியதிகளின்படி பதிவுசெய்வதற்கு ஏல்தகவுடைய தாகவிராதவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகையை பதிவுசெய்வதற்கு மறுத்தல் வேண்டும் என்பதுடன் அதற்கான காரணங்கள் விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்:

ஆயின், இப்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமை யதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விண்ணப் பத்தில் ஏதேனும் குறைபாடு நிலவுகின்றவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி விண்ணப்பத்தேதி யிலிருந்து மூன்றுமாதங்களினுள் அதனை விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவித்தல் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அத்தகைய ஏதேனும் குறைபாட்டை நிவர்த்திசெய்வதற்கான வாய்ப் பொன்றை விண்ணப்பதாரருக்கு அளித்தலும் வேண்டும். எந்தத் தேதியன்று விண்ணப்பதாரர் நிவர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தை பணிப் பாளர் தலைமையதிபதிக்கு மீள சமர்ப்பிக்கின்றாரோ அந்தத் தேதி பதிவுசெய்வதற்காக அத்தகைய விண்ணப்பத்தை பெற்ற தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எந்த விண்ணப்பதாரரின் விண்ணப்பம் (3) ஆம் உட்பிரிவின்கீழ் மறுக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் விண்ணப்பதாரர், அத்தகைய மறுப்புக் காக பணிப்பாளர் தலைமையதிபதியினால்

குறித்துரைக்கப்பட்ட காரணங்களுடன் திருப்திப்படா விடின், எந்தத் தேதியன்று அம்மறுப்பு விண்ணப்ப தாரருக்கு அறிவிக்கப்பட்டதோ அந்தத் தேதியி லிருந்து மூன்று மாதங்களினுள் அம்மறுப்புக்கு எதிராக எழுத்திலான அவரது சமர்ப்பணங்களை பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யலாம்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய சமர்ப்பணங்களைப் பெறுவதன் மேல், கேட்பு அவசியமென அவர் கருதின், அத்தகைய சமர்ப்பணங்கள் தொடர்பான கருமம் பற்றிய கேட்புக்கான ஒரு தேதி, நேரம் மற்றும் இடம்பற்றி விண்ணப்பதாரருக்கு அறிவிக்கலாம்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய கேட்பின் பின்னர் அத்தகைய விண்ணப்பத்தை பதிவுசெய்வதற்கு மறுக்கலாம் அல்லது விண்ணப் பத்தை உள்ளவாறாக அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி தோதானதெனக் கருதக்கூடிய வாறான அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகை யின் பயன்பாட்டின் விதம் அல்லது இடம் பற்றிய அத்தகைய நிபந்தனைகள், திருத்தங்கள் அல்லது வரையறைகளுக்கமைய விண்ணப்பத்தை பதிவுசெய்யலாம்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதி ஏதேனும் விண்ணப்பத்தைப் பதிவுசெய்வதற்கு மறுக்கின்ற விடத்து அல்லது (6) ஆம் உட்பிரிவில் குறித்துரைக் கப்பட்டவாறு எவையேனும் நிபந்தனைகளுக்கமைய விண்ணப்பமொன்றை பதிவுசெய்கின்றவிடத்து, அவர், விண்ணப்பதாரர் அத்தகைய மறுப்புக்கான அல்லது பதிவுசெய்வதற்கான நிபந்தனையுடனான ஏற்றுக்கொள்ளுதலுக்கான காரணங்களைக் கோரினால் அவற்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

விண்ணப்பத்தை வெளியிடுதல்

161இ.(1) பதிவுசெய்யப்படுவதற்கு நாடப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகை 161அ என்னும் பிரிவின் கீழ் ஏல்தகவுடையதாகவுள்ளது என பணிப்பாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அவரினால் அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத காலப் பகுதியொன்றினுள், விண்ணப்பத்தை வெளியிடுவதற்காக விதித்துரைக்கப்பட வேண்டியவாறான கட்டணத்தைப் பெறுவதன் மேல் வர்த்தமானியில் அத்தகைய விண்ணப்பத்தை அவர் வெளியிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நேர காலப்பகுதியினுள் அத்தகைய கட்டணத்தைச் செலுத்துவதற்கு தவறுகின்றவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி புவியியற்சார் சுட்டிக்காட்டுகையை பதிவுசெய்வதற்கு மறுத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பத்தை வெளியிடும் போது பின்வருவனவற்றை எடுத்துக்கூறுதல் வேண்டும்:

(அ) விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி;

(ஆ) விண்ணப்பத்தேதி;

(இ) புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் பிரதிநிதித்துவம்;

(ஈ) எந்தப் பண்டங்களுக்கு புவியியற்சார் சுட்டிக்காட்டுகை பதிவுசெய்யப்படுவதற்கு நாடப்படுகின்றதோ அந்தப் பண்டங்கள்;

(உ) அளவுக்குறிப்பீட்டின் சுருக்கம் மற்றும் புவியியற்சார் இடப்பரப்பின் வரைபடம்; அத்துடன்

(ஊ) விண்ணப்பதாரர் இலங்கைக்கு வெளியே வதிவாளராகவிருப்பின், இலங்கையில் சேர்ப்பிப்பதற்கான அஞ்சல் முகவரியொன்று.

பதிவுக்கான எதிர்ப்பு

161ஈ. (1) எவரேனும் ஆள் 161இ என்னும் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகை 161அ என்னும் பிரிவின் நியதிகளின்படி ஏல்தகவுடையதாகவில்லை என கருதுகின்றவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியொன்றினுள் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அஞ்சல்மூலம் அல்லது கையில் ஒப்படைப்பதன் மூலம் அவ்வாறு வெளியிடப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் பதிவுக்கான எதிர்ப்புப் பற்றிய அறிவித்தலை அனுப்பலாம். எதிர்ப்புப் பற்றிய அறிவித்தலை வழங்குகின்ற ஆள், எந்த ஏதுக்களின் மீது அத்தகைய எதிர்ப்புப் பற்றிய அறிவித்தல் செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்களையும் குறித்துரைத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதுக்களை நிலைநாட்டுவதற்கு அவசியமான தகவல்களையும் சான்றையும் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) ஏதேனும் எதிர்ப்புப் பற்றிய அறிவித்தல் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதியினுள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெறப்படாதிருப்பின், அவர் 161ஆ என்னும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்கு நாடப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகையை பதிவுசெய்தல் வேண்டும்.

(3) ஏதேனும் எதிர்ப்புப் பற்றிய அறிவித்தல், அத்தகைய அறிவித்தல் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்களை நிலைநாட்டுவதற்கான சான்று அல்லது தகவல்களுடன் சேர்த்தும் பணிப்பாளர் தலைமை யதிபதியினால் பெறப்படுகின்றவிடத்து, பணிப் பாளர் தலைமையதிபதி அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்றை விண்ணப்பதாரர் மீது சேர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அவரது விண்ணப்பத்தை ஆதாரப்படுத்து வதற்கான சான்று அல்லது தகவல்களுடன் சேர்த்து அத்தகைய ஏதுக்களின்மீதான அவரது அவதானங் களைச் செய்வதற்கு அவரைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

(4) விண்ணப்பதாரரின் அவதானத்தைப் பெறுவதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி திறத்தவர்களைக் கேட்டல் அவசியமெனக் கருதினால் அத்தகைய கேட்பின் பின்னர், அத்த கைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகை பதிவுசெய்யப் பட வேண்டுமா அல்லவா என்பது பற்றி இயன்றளவு துரிதமாக முடிபுசெய்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி புவியியற்சார் சுட்டிக் காட்டுகை யானது பதிவுசெய்யப்படமுடியுமென முடிபுசெய் தால் அப்போது அவர் விடயத்துக்கேற்ப –

(அ) அவரது முடிபுக்கெதிராக 173 ஆம் பிரிவின்கீழ் மேன்முறையீடு எதுவும் செய்யப்படாதவிடத்து, எந்தக் காலப் பகுதியினுள் அவரது முடிபுக்கு எதிராக

மேன்முறையீடு ஒன்று செய்யப்படலாமோ அந்தக் காலப்பகுதி முடிவுற்றதன் மேல்; அல்லது

(ஆ) அவரது முடிபுக்கெதிராக 173 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீடொன்று செய்யப்படுகின்றவிடத்து, அத்தகைய மேன்முறையீடு தள்ளுபடிசெய்யப்படுவதன் மேல்,

எவையேனும் நிபந்தனைகள், தேவைப்பாடுகளுக்கமைய அல்லது அத்தகைய திருத்தங்கள் அல்லது திரிபுகளுக்கமைய அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகையை பதிவுசெய்யலாம்.

புவியியற்சார் சுட்டிக் காட்டுகைகளின் பதிவை புதுப்பித்தல்

161(உ). (1) ஏதேனும் புவியியற்சார் சுட்டிக் காட்டுகையின் பதிவானது, அது முன்னரே இல்லாதாக்கப்பட்டாலொழிய, விண்ணப்பத் தேதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு செல்லுபடியானதாதல் வேண்டும்.

(2) ஏதேனும் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் பதிவு, அது முடிவுறுவதற்கு முன்னரான ஆறு மாதங்களினுள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய புதுப்பித்தலுக்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து விண்ணப்பமொன்றைச் செய்வதன் மீது ஒவ்வொன்றும் தொடர்ச்சியான பத்து ஆண்டு காலப்பகுதிக்கு அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் சொந்தக் காரரினால் புதுப்பிக்கப்படலாம்:

ஆயின், பணிப்பாளர் தலைமையதிபதி, விதித்துரைக்கப்படவேண்டியவாறான மிகைக் கட்டணமொன்றைக் கொடுப்பனவு செய்ததன்மேல்,

பதிவை புதுப்பிப்பதற்கான அத்தகைய முடிவுத் தேதியின் பின்னர் ஆறுமாத அருட்காலப்பகுதி யொன்றை விண்ணப்பதாரருக்கு அளிக்கலாம்.

(3) பதிவைப் புதுப்பித்தலானது பணிப்பாளர் தலைமையதிபதியினால் புவியியற்சார் சுட்டிக் காட்டுகை பற்றிய ஏதேனும் மேலதிக பரிசோதனைக்கு அல்லது எவரேனும் ஆளினால் எதிர்ப்புக்கு அமைந்ததாதல் ஆகாது.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் பற்றிய புதுப்பித்தலை இடாப்பில் பதிதல் வேண்டும் என்பதுடன் அது வர்த்தமானியில் வெளியிடப்படு வதனை செய்வித்தலும் வேண்டும்.

(5) விண்ணப்பமொன்று (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு விண்ணப்பதாரரி னாலான புதுப்பித்தல் கட்டணத்துடன் சேர்த்து புதுப்பித்தலுக்காக அனுப்பப்பட்டிராதவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் இடாப்பிலிருந்து புவியியற்சார் சுட்டிக்காட்டுகையை நீக்குதல் வேண்டும்.".

*முதன்மைச்சட்ட வாக்கத்தில் XXXIIIஅ, XXXIIIஆ, XXXIIIஇ, XXXIIIஈ மற்றும் XXXIIIஉ என்னும் புதிய அத்தியாயங் களை உட்புகுத்துதல்*

**9**. பின்வரும் புதிய அத்தியாயங்கள் முதன்மைச் சட்டவாக்கத்தில் 161உ என்னும் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப் படுகின்றனவென்பதுடன் அச்சட்டவாக்கத்தின் XXXIIIஅ, XXXIIIஆ, XXXIIIஇ, XXXIIIஈ மற்றும் XXXIIIஉ என்னும் அத்தியாயங்களாக பயனுறுதலும் வேண்டும்:-

## "அத்தியாயம் XXXIIIஅ

### பதிவுச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் புவியியற்சார் சுட்டிக்காட்டுகை இடாப்பு

பதிவுச் சான்றிதழ் வழங்குதல்

*161ஊ.* ஏதேனும் விண்ணப்பம் இப்பாகத்தின் கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் உரியமுறையில் பதிவுசெய்யப்பட்டிருப்பின், அவர் சான்றிதழுக்கான விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைப் பெறுவதன் மேல், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் (இதனகத்துப்பின்னர் ''பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் சொந்தக்காரராகவுள்ளவரான விண்ணப்பதாரருக்கு பதிவுச்சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

புவியியற்சார் சுட்டிக் காட்டுகை இடாப்பு

*161எ.* (1) பணிப்பாளர் தலைமையதிபதி "புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் இடாப்பு" என வழைக்கப்படும் இடாப்பொன்றை அலுவலகத்தில் வைத்துப் பேணுதல் வேண்டும்; அவ்விடாப்பில் எல்லா பதிவுசெய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளும் அவற்றின் பதிவொழுங்கில் பதியப்படுதல் வேண்டும்.

(2) பின்வரும் விபரங்கள், புவியியற்சார் சுட்டிக் காட்டுகைகள் இடாப்பில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்:-

(அ) புவியியற்சார் சுட்டிக்காட்டுகை;

(ஆ) பதிவிலக்கம்;

(இ) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் பெயர் மற்றும் முகவரி அத்துடன் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் இலங்கைக்கு வெளியே இருப்பின், இலங்கையில் சேர்ப்பிப்பதற்கான ஒரு அஞ்சல் முகவரி;

(ஈ) விண்ணப்பம் மற்றும் பதிவுத் தேதி;

(உ) எந்தப் பண்டங்கள் தொடர்பில் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் பதிவு அளிக்கப்பட்டுள்ளதோ அந்தப் பண்டங்கள் பற்றிய பட்டியல்;

(ஊ) அளவுக்குறிப்பீட்டின் சுருக்கம்;

(எ) புவியியற்சார் இடப்பரப்பின் வரைபடம்; அத்துடன்

(ஏ) அளவுக்குறிப்பீடுகள் மற்றும் இணைந்த கட்டுப்பாட்டுத் திட்டம்;

(3) எவரேனுமாள் புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் இடாப்பை பரிசோதனையிடலாம் என்பதுடன் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தை கொடுப்பனவு செய்வதன் மீது அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரித்தெடுகைகளையும் பெறலாம்.

## அத்தியாயம் XXXIIIஆ

## பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் ஒருவரின் உரிமைகள் மற்றும் புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் இடாப்பின் நிருவாகம்

பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் உரிமைகள்

161ஏ. புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் பின்வருவனவற்றைத் தடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும் –

(அ) எந்த வகையினவான பண்டங்களுக்கு புவியியற்சார் சுட்டிக்காட்டுகை ஏற்புடையதாகவுள்ளதோ அந்த வகையினவான பண்டங்கள் தொடர்பில் –

(i) பண்டங்களின் உண்மையான தோற்றுவாய் சுட்டிக்காட்டப்பட்டு இருப்பினும் கூட அல்லது புவியியற்சார் சுட்டிக்காட்டுகை உருமாற்றப்பட்ட வடிவத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பினும் கூட அல்லது "மகுடம்", 'இனம்", "வகை", "தயாரிப்பு", "நகல்", "முறை", "இல் உற்பத்திசெய்யப் பட்டவாறு", "போன்ற", "ஒத்த" என்னும் சொல்லமைப்பு மூலம் அல்லது அத்தகைய ஒத்த சொல்லமைப்பு மூலம் இணைக்கப்பட்டிருப்பினும்கூட, உற்பத்திசெய்யப்பட்ட ஒரு கமத்தொழில்சார் உற்பத்திப் பொருள், உணவு, வைன் அல்லது மதுசாரம் அல்லது கைவினைப்பொருள் மற்றும் சம்பந்தப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகையினால் சுட்டிக்காட்டப்பட்ட இடத்தில் தோன்றாத அல்லது புவியியற் சார் சுட்டிக்காட்டுகையைப் பயன்படுத்துவதற்கான வேறு ஏதேனும் ஏற்புடையற்பாலதான தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகாத இயற்கைப் பண்டங்கள் உட்பட பண்டங்களை அடையாளம் காணும் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றின் நேரடியான அல்லது நேரடியாகவல்லாத பயன்பாடு, துர்ப்பிரயோகம், நகல் அல்லது உணர்த்துகை; அல்லது

(ii) இச்சட்டத்தின் 160 ஆம் பிரிவின் கருத்தினுள் நியாயமற்ற போட்டி பற்றிய செயலொன்றை அமைத்துருவாக்குகின்ற புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றின் ஏதேனும் நேரடியான அல்லது நேரடியாகவல்லாத பயன்பாடு, துர்ப்பிரயோகம், நகல் அல்லது உணர்த்துகை; அல்லது

(iii) உற்பத்திசெய்யப்பட்ட ஒரு கமத்தொழில்சார் உற்பத்திப் பொருள், உணவு, வைன் அல்லது மதுசாரம் அல்லது கைவினைப்பொருள் மற்றும் இயற்கைப் பண்டங்கள் உட்பட பண்டங்களின் உண்மையான தோற்றுவாய், தோன்றுமிடம் அல்லது தன்மை பற்றி பாவனையாளர்களை பிழை வழியுய்க்கக் கூடிய சாத்தியமுள்ள வேறு ஏதேனும் செயல்முறை;

(ஆ) எந்த வகையினவான பண்டங்களுக்கு புவியியற்சார் சுட்டிக்காட்டுகை ஏற்புடையதாகவுள்ளதோ அந்த வகையினவாகவிராத பண்டங்களுக்காக -

(i) உற்பத்திசெய்யப்பட்ட ஒரு கமத்தொழில்சார் உற்பத்திப் பொருள், உணவு, வைன் அல்லது மதுசாரம் அல்லது கைவினைப்பொருள் மற்றும் சம்பந்தப்பட்ட இயற்கைப்

பண்டங்கள் உட்பட எந்த வகையினவான பண்டங்களுக்கு புவியியற்சார் சுட்டிக்காட்டுகை ஏற்புடையதாகவுள்ளதோ அந்த வகையினவான பண்டங்களாக விராத பண்டங்கள் தொடர்பில் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் ஏதேனும் நேரடியான பயன்பாடு, துர்ப்பிரயோகம், நகல் அல்லது உணர்த்துகை; அத்தகைய பயன்பாடு அப்பண்டங்களுக்கும் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் பயன்படுத்துநர்களுக்குமிடையிலான தொடர்பொன்றை சுட்டிக்காட்டினால் அல்லது முன்வைத்தால் மற்றும் அவர்களின் அக்கறைகளுக்கு சேதம் ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் கொண்டதாக விருந்தால் அல்லது புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் நன்மதிப்பு காரணமாக ஏற்புடையதாகவிருக்குமிடத்து, அத்தகைய பயன்பாடு நியாயமற்ற முறையில் பாதிக்கும் அல்லது இளகச்செய்யும் சாத்தியம் கொண்டதாகவிருந்தால் அல்லது அந்த நன்மதிப்பிலிருந்து நியாயமற்ற அனுகூலத்தைப் பெற்றால்;

(ii) பண்டங்களின் உண்மையான தோற்றுவாய் சுட்டிக்காட்டப்பட்டு இருப்பினும்கூட அல்லது புவியியற்சார் சுட்டிக்காட்டுகை உருமாற்றப்பட்ட வடிவத்தில்

பயன்படுத்தப்பட்டிருப்பினும்கூட அல்லது ''மகுடம்'', ''இனம்'', ''வகை'', ''தயாரிப்பு'', ''நகல்'', ''முறை'', ''இல் உற்பத்திசெய்யப் பட்டவாறு'', ''போன்ற'', ''ஒத்த'', என்னும் சொல்லமைப்பு மூலம் அல்லது அத்தகைய ஒத்த சொல்லமைப்பு மூலம் இணைக்கப்பட்டிருப்பினும்கூட, உற்பத்திசெய்யப்பட்ட ஒரு கமத்தொழில்சார் உற்பத்திப் பொருள், உணவு, வைன் அல்லது மதுசாரம் அல்லது கைவினைப்பொருள் மற்றும் இயற்கைப் பண்டங்களின் நகலாக அமைகின்ற சம்பந்தப் பட்ட அப்பண்டங்கள் உட்பட எந்த வகையினவான பண்டங்க ளுக்கு புவியியற்சார் சுட்டிக் காட்டுகையின் ஏற்புடையதாக வுள்ளதோ அந்த வகையின வான பண்டங்கள் அல்லாத பண்டங்கள் தொடர்பில் புவியியற்சார் சுட்டிக்காட்டு கையின் ஏதேனும் நேரடியான பயன்பாடு, துர்ப்பிரயோகம், நகல் அல்லது உணர்த்துகை; அல்லது

(iii) பண்டங்களின் உண்மையான தோற்றுவாய், தோன்றுமிடம் அல்லது தன்மை பற்றி பாவனை யாளர்களை பிழைவழியுய்க் கக்கூடிய சாத்தியம் உள்ள வேறு ஏதேனும் செயல்முறை.

பதிவு செய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக் காட்டுகை இனம் சார்ந்ததாக வருதலாகாது

161ஜ. இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் புவியியற்சார் சுட்டிக்காட்டுகை, புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றாக பதிவுசெய்யப்பட்ட பண்டத்தின் பொதுவான சுட்டுப்பெயராக பொதுவாக அறியப்படுகின்ற பெயரைக் குறிப்பீடு செய்கின்ற இனம்சார்ந்ததாக வருதலாகாது.

## அத்தியாயம் XXXIIIஇ

## புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளின் பதிவை இல்லாதாக்குதல்

புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளின் பதிவை இல்லாதாக்குதல்.

161ஒ. பணிப்பாளர் தலைமையதிபதி -

(அ) புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளாக பதிவுசெய்யப்பட்ட எவையேனும் பண்டங்கள் புவியியற்சார் சுட்டிக் காட்டுகை பண்டங்களாக அவற்றின் விசேட பண்பை இழக்கின்ற விடயத்தில்;

(ஆ) எந்த நிபந்தனைகள் மற்றும் தேவைப் பாடுகளுக்கமைய அத்தகைய புவியியற் சார் சுட்டிக்காட்டுகை பதிவு செய்யப்படு கின்றதோ அந்த நிபந்தனைகள் மற்றும் தேவைப்பாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றுடன் இணங்கி யொழுகுவதற்கு பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் தவறுகின்ற விடயத்தில்;

(இ) அத்தகைய புவியியற்சார் சுட்டிக் காட்டுகையின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் பதிவை இல்லா தாக்குவதற்காக எழுத்தில் பணிப்பாளர் தலைமையதிபதியைக் கோருகின்ற விடயத்தில்; அல்லது

(ஈ) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் 161உ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வாறு புவியியற்சார் சுட்டிக்காட்டுகை யொன்றின் பதிவை புதுப்பிப்பதற்கு தவறுகின்ற விடயத்தில்,

ஏதேனும் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் பதிவை இல்லாதாக்கலாம்.

## அத்தியாயம் XXXIIIஈ

### வெளிநாட்டு புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள்

வெளிநாட்டு புவியியற்சார் சுட்டிக் காட்டுகைகள்

161ஒ. ஏதேனும் வெளிநாட்டு புவியியற்சார் சுட்டிக்காட்டுகை, அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகை அதன் தோற்றுவாய் நாட்டில் விடயத்துக்கேற்ப, புவியியற்சார் சுட்டிக்காட்டுகை யொன்றாக அல்லது சான்றுப்படுத்துகைக் குறியொன்றாக பாதுகாக்கப்படும் காலமெல்லாம் இலங்கையில் பதிவுசெய்யப்படலாம். இச்சட்டத்தில் புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளின் பதிவு தொடர்பான ஏற்பாடுகள் அத்தகைய வெளிநாட்டு புவியியற்சார் சுட்டிக்காட்டுகைக்கு ஏற்புடையன வாதல் வேண்டும்.

## அத்தியாயம் XXXIIIஉ

### நானாவிதமானவை

பதிவு செய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகை களுக்கான மாற்றங்கள்

161ஔ. புவியியற்சார் சுட்டிக்காட்டுகை யொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், தொழில்நுட்பவியல்கள், விஞ்ஞான அபிவிருத்தி மற்றும் புவியியற்சார் இடப்பரப்பின் எல்லை நிர்ணயம் காரணமாக அளவுக்குறிப்பீடுகள் மற்றும் இணைந்த கட்டுப்பாட்டுத்திட்டத்தை திருத்த

உட்கருதின், விதித்துரைக்கப்படவேண்டியவாறான கட்டணங்களுடன் சேர்த்து அப்பயன்பட பணிப்பாளர் தலைமையதிபதிக்கு கோரிக்கை யொன்றைச் செய்யலாம்:

ஆயின், பதிவுசெய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றின் அடையாளத்தைப் பாதிக்கின்ற அத்தகைய புவியியற்சார் சுட்டிக் காட்டுகைக்கான எவையேனும் கணிசமானளவு திருத்தம் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது.

இச்சட்டத்தின் கீழ் சான்றுப் படுத்துகைக் குறியொன்றாக பதிவு செய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக் காட்டுகைகள்

161க. இச்சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் சான்றுப்படுத்துகை குறியொன்றாக புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றை பதிவுசெய்துள்ள எவரேனும் ஆள், அவர் 161 ஆ என்னும் பிரிவின் கீழ் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றாக அத்தகைய குறியை பதிவுசெய்வதற்கு விண்ணப் பிக்க விரும்பின் அவ்வாறு விண்ணப்பிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவைத் திருத்துதல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "கைத்தொழில் வடிவமைப்பு, குறிகள் ஆக்கவுரிமைகள், நியாயமற்ற போட்டி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கைத்தொழில் வடிவமைப்பு கள், குறிகள், ஆக்கவுரிமைகள், புவியியற்சார் சுட்டிக் காட்டுகைகள் மற்றும் நியாயமற்ற போட்டி" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (8) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (அ) என்னும் பந்தியில், "வர்த்தகக் குறிகள், ஆக்கவுரிமைகள், நியாயமற்ற போட்டி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வியாபாரக்

குறிகள், ஆக்கவுரிமைகள், புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் மற்றும் நியாயமற்ற போட்டி'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில், ''வர்த்தகக் குறிகள், ஆக்கவுரிமைகள், நியாயமற்ற போட்டி'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமைகள், புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் மற்றும் நியாயமற்ற போட்டி'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 168 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 168 ஆம் பிரிவு, ''ஆக்கவுரிமை அல்லது குறி ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் தொடர்பில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆக்கவுரிமை, குறி அல்லது புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் தொடர்பில்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 170 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 170 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், ''ஆக்கவுரிமை, குறி, ஒன்றின் பதிவை அல்லது சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேறு ஏதேனும் பதிவை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆக்கவுரிமை, குறி, புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றின் பதிவை அல்லது சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேறு ஏதேனும் பதிவை'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 172 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 172 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''கைத்தொழில் வடிவமைப்பின், ஆக்கவுரிமையின், குறியின் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட வேறு ஏதேனும்''

என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கைத்தொழில் வடிவமைப்பின், ஆக்கவுரிமையின் குறியின், புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், ''கைத்தொழில் வடிவமைப்பின், ஆக்கவுரிமையின், குறியின் அல்லது சட்டத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட வேறு ஏதேனும் பதிவின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கைத்தொழில் வடிவமைப்பின், ஆக்கவுரிமையின், குறியின், புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்ட வேறு ஏதேனும் கருமத்தின்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (3) ஆம் உட்பிரிவில், ''கைத்தொழில் வடிவமைப்பொன்றின் ஆக்கவுரிமையின், குறியின் அல்லது சட்டத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட வேறு ஏதேனும் விடயத்தின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கைத்தொழில் வடிவமைப்பொன்றின், ஆக்கவுரிமையின், குறியின், புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் அல்லது சட்டத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட வேறு ஏதேனும் கருமத்தின்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 186அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 186 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 186அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

*''புவியியற்சார் சுட்டிக் காட்டுகைகள் தொடர்பான தவறுகள்*

186அ. இப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வாறான குறிகள் தொடர்பிலான தவறுகளும் தண்டங்களும் தொடர்பான ஏற்பாடுகள் புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 212 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 212 ஆம் பிரிவு, "சமவாயம்" என்னும் பதத்தின் வரைவிலக்கணத்தில், "ஆக்கவுரிமைகள், குறிகள் மற்றும் சட்டக்கோவையினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான வேறேதேனும் கருமம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆக்கவுரிமைகள், குறிகள், புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் அல்லது சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான வேறு ஏதேனும் கருமம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**16**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.